ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

7. அடைக்கலப் பத்து

7.1:
பத்தி முதலாமவற்றுள் பதி எனக்கு கூடாமல்
எத்திசையும் ஓழன்றோடி இளைத்துவிழும் காகம்போல்
முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில்
அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் நான் புகுந்தேனே.

7.2:
சடைமுடியன் சதுமுகனென்று இவர்முதலாந் தரமெல்லாம்
அடையவினைப் பயனாகி அழிந்துவிடும் படிகண்டு
கடிமலராள் பிரியாத கச்சிநகர் அத்திகிரி
இடமுடைய அருளாளர் இணையடிகள் அடைந்தேனே.

7.3:
தந்திரங்கள் வேறின்றித் தமதுவழி யழியாது
மந்திரங்கள் தம்மாலும் மற்றுமுள உரையாலும்
மந்தரங்கண்டு அடிபணிவார் அனைவர்க்கும் அருள்புரியும்
சிந்துரவெற் பிறையவனார் சீலமல தறியேனே.

7.4:
காகமிரக்கதன் மன்னர் காதலி கத்திரபந்து
நாகமரனயன் முதலா நாகநகரார் தமக்கும்
போகமுயர் வீடுபெறப் பொன்னருள் செய்தமைகண்டு
நாகமலை நாயகனார் நல்லடிப்போது அடைந்தேனே.

7.5:
உகக்கும் அவைஉகந்து உகவா அனைத்தும் ஒழிந்து உறவுகுணம்
மிகத்துணிவு பெறவுணர்ந்து வியன்காவ லெனவரித்துச்
சகத்திலொரு புகலிலாத் தவமறியேன் மதிட்கச்சி
நகர்கருணை நாதனை நல்லடைக்கலமாய் அடைந்தேனே.

7.6:
அளவுடையார் அடைந்தார்க்கும் அதனுரையே கொண்டவர்க்கும்
வளவுரை தந்தவனருளே மன்னிய மாதவத்தோர்க்கும்
களவொழிவார் எமரென்ன இசைந்தவர்க்குங் காவலராம்
துளவமுடி அருள்வரதர் துவக்கிலெனை வைத்தேனே.

7.7:
உமதடிகள் அடைகின்றேனென்று ஒருகாலுரைத்தவரை

அமையுமினி என்பவர்போல் அஞ்சலெனக் கரம்வைத்து
தமதனைத்தும் அவர்த்தமக்கு வழங்கியும் தாம் மிகவிளங்கு
அமைவுடைய அருளாளர் அடியிணையை அடைந்தேனே.

7.8:
திண்மை குறையாமைக்கும் நிறைகைக்கும் தீவினையால்
உண்மை மறவாமைக்கும் உளமதியில் உகக்கைக்கும்
தண்மை கழியாமைக்கும் தரிக்கைக்குந் தணிகைக்கும்
வண்மையுடை அருளாளர் வாசகங்கள் மறவேனே.

7.9:
சுரிதிநினை இவையறியுந் துணிவுடையார் தூமொழிகள்
பரிதிமதி யாசிரியர் பாசுரஞ்சேர்ந் தருக்கணங்கள்
கருதியொரு தெளிவாளாற் கலக்கமறுத்த அத்திகிரிப்
பரிதிமதி நயனமுடை பரமனடி பணிந்தேனே.

7.10:
திருமகளுந் திருவடிவுந் திருவருளுந் தெள்ளறிவும்
அருமையிலாமையும் உறவும் அளப்பரிய வடியரசும்
கருமமழிப் பளிப்பமைப்பும் கலக்கமிலா வகைநின்ற
அருள் வரதர் நிலையிலக்கில் அம்பென நான் அமிழ்ந்தேனே.

7.11:
ஆறுபயன் வேறில்லா அடியவர்கள் அனைவர்க்கும்
ஆறுமதன் பயனுமிவை ஒருகாலும் பலகாலும்
ஆறுபயன் எனவே கண்டு அருளாளர் அடியிணைமேற்
கூறிய நற்குணவுரைகள் இவைபத்தும் கோதிலவே.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

அடிவரவு: பத்தி, சடைமுடியன், தந்திரங்கள்,
காகம், உகக்கும், அளவுடையார், உமதடிகள், சுருதி,
திருமகள், ஆறுபயன், அமலன்.